DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No. 434/2025
Prosecution witness – P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. ஹேமபிரியா | Caste: | |
| Father's Name | :சங்கர் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

13.05.2025 – 11.20 AM
2ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். 1ம் எதிரி வேறு ஒரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளதாக 1ம் எதிரி தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் தெரிவித்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
<u>முதல் விசாரணை</u>:–

1. நான் இராமநாதபுரம் ஆயுதப்படையில் 3ம் படைப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 26.09.2025ம் தேதியன்று காலை 06.30 மணியளவில் அபிராமம் காவல் நிலைய குற்ற எண்.71/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளான அஜித் என்கிற விக்னேஸ்வரன், மணிவண்ணன் ஆகியோர்களை மதுரை மத்திய சிறையில் இருந்து கமுதி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவேண்டி கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு நானும், காவலர் 1079– செந்தில்குமார் (அ.சா.1), காவலர் 551– திருநாவுக்கரசு, காவலர் 537– கார்த்திக்ராஜா, காவலர் 768– இராமச்சந்திரன் ஆகியோருடன் TN–65–G–0970 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் வாகனத்தை காவலர் 2138– சுரேஷ்குமார் என்பவர் ஓட்டி வர காலை 10.30 மணியளவில் மதுரை மத்திய சிறைக்கு சென்று அங்கிருந்து மேற்படி எதிரிகளை அழைத்துக்கொண்டு கமுதி நீதிமன்றத்திற்கு பகல் 12.30 மணியளவில் வந்தடைந்தோம்.

2. நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்த போது பகல் 12.45 மணியளவில் 1ம் எதிரி அஜித் என்பவர் கீழே கிடந்து ஒரு துண்டுச்சீட்டை எடுத்து அவரை பார்க்க வந்திருந்த அவரது உறவினர் ஒருவரிடம் கொடுக்க முயன்றபோது அதைப் பார்த்த அ.சா.1 இவ்வாறு துண்டு சீட்டுகளை கொடுக்கக் கூடாது என்று கூறியவுடன் அ.சா.1யை பார்த்து 1ம் எதிரி நான் அப்படிதாண்டா கொடுப்பேன்.

போலீஸ் நாயே என்று தரக்குறைவாக பேசியவுடன் அதை கவனித்த நான் சென்று அ.சா.1ம் கேட்டபோது அவர் மேற்படி எதிரி துண்டுச்சீட்டை கொடுக்க முயன்றதையும், அதை அ.சா.1 தடுக்க முயன்றதையும் என்னிடம் கூறினார்.

3. நான் 1ம் எதிரியிடம் எதுவாக இருந்தாலும் என்னைக் கேட்டுதான் செய்யவேண்டும் என்று கூறியபோது அ.சா.1 நான் எதிரியிடம் இப்படி செய்யக்கூடாது என்று தான் சொன்னேன் என தெரிவித்தார். அ.சா.1 அப்படி தெரிவித்த உடனேயே 1ம் எதிரி அ.சா.1யைப் பார்த்து பற்களை கடித்துக்கொண்டு அவரை மிரட்டும் தோனியில் கையை மடக்கி குத்துவது போன்று காண்பித்தார். அப்போது காவலர் திருநாவுக்கரசு 1ம் எதிரியின் கையைப் பிடித்து இவ்வாறு செய்யக்கூடாது என்று கூறியபோது 1ம் எதிரி அவரது கையையும் தட்டிவிட்டுவிட்டார்.

4. 1ம் எதிரி மீண்டும் அ.சா.1யைப் பார்த்து நான் பெரிய ரவுடி நான் நினைத்தால் உன்னை முடித்துவிடுவேன், என்மீது நெரைய கேஸ் உள்ளது நான் ஜெயிலுக்குள்ளே இருந்து கொண்டே உன்னை கொன்றுவிடுவேன் என்று தெரிவித்தார். அவரோடு 2ம் எதிரியும் சேர்ந்து கொண்டு நீ என்ன சாதி, எப்படி நீ எங்களை பேசலாம் என்றெல்லாம் கூறினார். அ.சா.1யைப் பார்த்து எதிரிகள் இவ்வாறு நடந்து கொண்டதால் நான் அ.சா.1டம் நீங்கள் சற்று விலகி இருங்கள் என்று கூறினேன். அதன்பிறகு எதிரிகளிடம் நான் சமாதானமாக பேசி அவர்களை சமாதானப்படுத்தி நீதிமன்ற வாய்தா முடிந்தவுடன் மீண்டும் அவர்களை மாலை 04.30 மணியளவில் வாகனத்தில் ஏற்றி மதுரை மத்தியசிறைக்கு கொண்டு சேர்த்தோம்.

5. இதற்கிடையில் நீதிமன்ற வளாகத்தில் நடந்த மேற்படி பிரச்சனை குறித்து நான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்துவிட்டேன். உயர் அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின் பேரில் அ.சா.1 அன்றைய தினமே 06.30 மணிக்கு கமுதி காவல் நிலையம் சென்று எழுத்துபூர்வமாக புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப் பதிவு செய்த சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். எனக்கு எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும். அவர்கள் இன்று

நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது கூறிய சங்கதிகளைத் தான் தற்போது நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மத்திய சிறையில் 3 சிறைவாசிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல சிறை பதிவேட்டில் கையொப்பம் செய்து அவர்களை அழைத்து வந்தேன். அன்றைய தினம் பதிவேட்டில் வழிக்காவல் செய்த அனைத்து காவலர்களும் கையொப்பம் செய்தார்கள். அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் நான் மட்டும் பதிவேட்டில் கையொப்பம் செய்து சிறைவாசிகளை பெற்று வந்ததாக கூறி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். அனைவருமே கையொப்பம் செய்தோம்.

2. சார்பு ஆய்வாளர் என்ற முறையில் சிறைவாசிகளை சிறையில் இருந்து பெற்று அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி பிறகு மீண்டும் சிறையில் ஒப்படைப்பது வரை அனைத்தும் என் பொறுப்பில் இருந்தது என்றால் சரிதான். பெதுவாக சிறைவாசிகளை சிறையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதற்கு முன்னர் அவர்கள் வசம் தண்ணீர் மற்றும் உணவு உள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு அதன்பிறகு தான் அழைத்து வரவேண்டுமென்றால் சரிதான். அன்றைய தேதியில் எதிரிகள் சிறையில் இருந்து உணவு எடுத்து வந்தார்களா என்றால் இல்லை.

3. காலையில் எதிரிகளை அழைத்து வந்த நிலையில் அவர்களை முன்னிலைப்படுத்த வேண்டிய நீதிமன்றமானது 90 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்பதை நான் தெரிந்து கொண்டுள்ளதால் அவர்களை மீண்டும் சிறையில் ஒப்படைக்க காலதாமதம் ஆகலாம் என்பதால் அவர்கள் மதிய உணவு எடுத்து வரவில்லை என்பதை சிறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தேனா என்றால் ஆமாம் தெரிவித்தேன். இந்த விபரத்தை சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறினேனா என்றால் இல்லை. மதுரையில் இருந்து கமுதிக்கு வரும் வழியில் வாகனத்தை எங்கேயாவது நிறுத்தினோமா என்றால் இல்லை.

4. கமுதி நீதிமன்றத்திற்கு 12.30 மணிக்கு வந்தடைந்தோம். எதிரிகள்

வரும் வழியில் தண்ணீர் கேட்டார்களா என்றால் நினைவில் இல்லை. எதிரிகள் வரும் வழியில் தண்ணீர் கேட்டார்கள் என்றாலும் போலீசாராகிய நாங்கள் அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் 1ம் எதிரி யாருக்கு துண்டுச்சீட்டை கொடுக்க முயன்றார் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

5. அ.சா.1—டம் என்ன பிரச்சனை என்பதை கேட்டு தெரிந்து கொண்டதாக முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள நிலையில் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அவ்வாறு கேட்டு தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் துண்டுச்சீட்டை வாங்கி பார்த்தேனா என்றால் ஆமாம் பார்த்தேன் அதில் என்ன இருந்தது என்றால் அதில் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் கலந்து கோடு வேர்டு போன்று யாருக்கோ தகவல் அளிக்கும் விதமாக இருந்தன. அந்த எழுத்துக்கள் தற்போது எனக்கு நினைவில் இல்லை. அந்த துண்டுச்சீட்டை என்ன செய்தேன் என்றால் அ.சா.1—டம் கொடுத்தேன். அ.சா.1—டம் எதற்காக துண்டுச்சீட்டை கொடுத்தேன் என்றால் அதை கீழே போடச்சொல்லி கொடுத்தேன். எதற்காக கீழே போடச்சொன்னேன் என்றால் அதை வைந்திருந்தால் வீணாக பிரச்சனை வரும் என்பதால் நான் எனது செல்போனில் போட்டோ எடுத்துவிட்டு அ.சா.1—டம் கொடுத்து கீழே போடச்சொன்னேன்.

6. அந்த புகைப்படத்தை சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேலும் எனது செல்போனில் இருந்து சார்பு ஆய்வாளரின் செல்போனுக்கு வாட்ஸ்ஆப் செயலி மூலமாக அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் துண்டுச்சீட்டால் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படுகிற நிலையில் அந்த துண்டுச்சீட்டில் யாருக்கோ தகவல் அளிப்பதாக இருந்ததாக கூறியுள்ள நிலையில் ஒரு சார்பு ஆய்வாளர் என்ற முறையில் அந்த துண்டுச்சீட்டு மிக முக்கிய ஆதாரம் என்பதை நான் தெரிந்து கொண்டேன். அந்த துண்டுச்சீட்டை அ.சா.1—டம் கொடுத்து கீழே போடச்சொல்லி சொன்னதாக நான் கூறுவது ஏற்புடையதாக இல்லை என்றாலும், நான் கூறுவது

போல சம்பவம் நடந்திருந்தால் அந்த துண்டுச்சீட்டை வழக்கின் முக்கிய ஆதாரமாக சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

7. 27.09.2025 ம் தேதி நான் ஆயுதப்படையில் பணியில் இருந்தேன். அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் கமுதி காவல் நிலையத்தில் இருந்து சார்பு ஆய்வாளர் விசாரணைக்காக அழைத்தால் உயர் அதிகாரிகளிடம் தகவல் சொல்லிவிட்டு நிலையம் வந்தடைந்தேன். 27.09.2025 ம் தேதி தான் அ.சா.1 உட்பட சம்பவத்தன்று வழிக்காவல் செய்த அனைத்து போலீசாரையும் சார்பு ஆய்வாளர் விசாரித்தார். 26.09.2025 ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் புகார் அளிக்க கமுதி காவல் நிலையத்திற்கு அ.சா.1 உடன் வழிக்காவல் செய்த நாங்கள் அனைவரும் சென்றோம். அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் புகார் அளித்த தினத்தில் அவர் மட்டும் காவல் நிலையம் சென்றதாகவும், அவரை அன்றைய தினமே சார்பு ஆய்வாளர் விசாரித்தாக நீதிமன்ற சாட்சியத்தில் கூறி இருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

8. சார்பு ஆய்வாளர் நான் கூறிய சங்கதிகளை பதிவு செய்தார் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது நான் 1ம் எதிரியிடம் துண்டுப்பேப்பரை ஏன் கொடுக்கிறாய் என்று கேட்டபோது 1ம் எதிரி என்னைப் பார்த்து திட்டி பல்லைக் கடித்துக்கொண்டு என்னை அடிக்க கையை ஓங்கியதாக கூறினேனா என்றால் இல்லை. ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது விசாரணை வாக்குமூலத்தில் அப்படிதான் உள்ளது என்றாலும், நான் சார்பு ஆய்வாளரிடம் மேற்படி கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. சாதி குறித்து 1ம் எதிரி பேசியதாக சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது கூறினேனா என்றால் ஆமாம் கூறினேன். அப்படி என்றால் சார்பு ஆய்வாளர் அதை பதிவு செய்யவில்லையா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது மேற்படி சாதி பற்றி 1ம் எதிரி கூறியதாக செல்லவே இல்லை என்றாலும், உண்மைக்கு புறம்பாக தற்போது மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேனா என்றாலும் சரியல்ல.

10. உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்து அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் அ.சா.1 புகார் அளிக்க வந்ததாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கு முன்னதாக சம்பவம் நடைபெற்றது அப்படி என்றால் நீதிமன்றத்தில் எதிரிகளின் செயலை தெரிவித்தேனா என்றால் இல்லை.

11. எதிரிகளுக்கு அன்றைய தினம் மதுரை மத்திய சிறைக்கு கொண்டு செல்வதற்கு முன்னதாக உணவு வாங்கி கொடுத்தேனா என்றால் ஆமாம். எங்கு வாங்கி கொடுத்தேன் என்றால் திருப்பாசேத்தி டோல்கேட் முன்பாக உள்ள ஒரு கடையில் வாங்கி கொடுத்தேன். என்னுடைய சொந்த பணத்தில் தான் நான் அவர்களுக்கு உணவு வாங்கி கொடுத்தேன். அவர்கள் உணவு தரவில்லை என்று பிரச்சனை செய்தார்கள். எதிரிகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் கொடுக்காததால் அவர்கள் எங்களிடம் பசியால் சாப்பாடு வேண்டும் என்று கேட்டதற்கு நாங்கள் தான் எதிரிகளை மிரட்டினோம் என்றாலும், அதற்கு எதிரிகள் எங்களை நீதிமன்றத்தில் கூறிவிடுவதாக சொன்னதால் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.13 16:12:10 +0530